AL/2014/58/T-I

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண் : ................................

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** "நாடகம் என்பது யாதேனும் ஒரு செயலைப் போலச் செய்தலாகும்" எனக் கூறியோர்,
(1) அரிஸ்டோட்டல், பேனாட்சா ஆகியோராவர்.
(2) அரிஸ்டோட்டல், பரதமுனி ஆகியோராவர்.
(3) அரிஸ்டோட்டல், அலடைஸ் நிக்கோல் ஆகியோராவர்.
(4) அரிஸ்டோட்டல், அபிநவகுப்தர் ஆகியோராவர்.
(5) அரிஸ்டோட்டல், கில்லபிராண்ட் ஆகியோராவர். (......)

**2.** 'நிருத்த, நிருத்திய, நாட்டிய' என்பதில் நிருத்திய என்பதன் பொருள்,
(1) தூய நடனம் ஆகும்.
(2) லயத்திற்கு அமைவான உடலசைவாகும்.
(3) ஆங்கீக, சாத்வீக, அபிநயம் என்பவற்றின் வழியாக யாதேனும் ஒரு பாவத்தை வெளிப்படுத்தும் நடனமாகும்.
(4) கதையைத் தழுவி வரும் கூத்தாகும்.
(5) தனியானதொரு நாடகம் ஆகும். (......)

**3.** 'புரொசீனியம் வில் வளைவு அரங்குகள்'(Pro-Scenium Arch Theatre) தோற்றம் பெற்ற காலம் எது ?
(1) கிரேக்க காலம் (2) உரோமர் காலம் (3) எலிசபெத் காலம்
(4) மறுமலர்ச்சிக் காலம் (5) மத்திய காலம் (......)

**4.** 'வட்டக்களரி' அரங்கு பற்றிய சரியான கூற்று **அல்லாதது**
(1) தமிழ்ப் பண்பாட்டில் கூத்துகள் ஆடப்படும் அரங்கவெளியாகும்.
(2) நடிகர்-பார்ப்போர் உறவு நெருக்கமானதாகும்.
(3) அரங்கவெளியைச் சுற்றிப் பார்ப்போர் அமர்ந்திருப்பர்.
(4) 16ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது.
(5) சபையோர் நடுவில் நிற்க கூத்தர்கள் அவர்களைச் சுற்றி ஆடுவர். (......)

**5.** சாத்வீக அபிநயத்தில் வரும் 'ஸ்வேத' என்பதன் பொருள்,
(1) உடல் நிலையாக நிற்றல் ஆகும். (2) உடல் நடுங்குதல் ஆகும்.
(3) வியர்த்தல் ஆகும். (4) கண்ணீர் சொரிதல் ஆகும்.
(5) மயங்குதல் ஆகும். (......)

**6.** பின்வருவனவற்றுள் நாட்டிய தர்மி பற்றிய சரியான கூற்று எது ?
(1) லலித அங்க அசைவுகள் அற்றது.
(2) பாத்திரங்களின் இயல்பான நடத்தையைக் காட்டுவது.
(3) இயல்பான அபிநயங்களைக் கொண்டது.
(4) பாத்திரங்கள் அபிநயங்களையும் அசைவுகளையும் குறியீடுகளால் சித்திரித்துக் காட்டுவது.
(5) ஒரு பாத்திரத்தை ஒரு நடிகரே நடிப்பது. (......)

[பக். 2 ஐப் பார்க்க

7. அரிஸ்டோட்டலின் 'கவிதையியல்' எனும் கிரேக்க திறஜெடி சம்பந்தமான நூலினைத் தமிழில் மொழிபெயர்த்தவர்
(1) அ. மணவாளன் (2) மு. இராமசாமி
(3) சோ. பத்மநாதன் (4) கணேசன் மேகநாதன்
(5) எஸ். என். ஸ்ரீ ராமதேசிகர் (......)

8. அரிஸ்டோட்டல் கூறும் அவலச் சுவையின் இலக்கணங்களுள், அவர் பிரதானமானதும் தனித்துவமானதும் எனக் குறிப்பிடும் கூறு
(1) கதைப்பின்னல் (2) பாத்திரம் (3) சிந்தனை
(4) இசை (5) சொற்றிறன் (......)

9. சமஸ்கிருத நாடகம் ஒன்றின் கதைப்பின்னல் ஐந்து பகுதிகளாகப் பரவிக்கிடக்கும் விதத்தினைப் பரதமுனி,
(1) கார்ய நிலைகள் என்பார். (2) சந்திகள் என்பார்.
(3) அர்த்த பிரகிருதி என்பார். (4) அர்த்த உப ஷேபகங்கள் என்பார்.
(5) விருத்திகள் என்பார். (......)

10. சிங்கள மக்களிடையே பயில் நிலையில் காணப்படும் 'ரட்டயக்கும' சடங்கின் பிரதான பாத்திரங்கள்,
(1) பதினெட்டுப் பிசாசுகள் ஆகும்.
(2) ஏழு மலட்டு ராணிகள் ஆவர்.
(3) பண்டுவசுதேவ மன்னனும் வேங்கைப்புலியும் ஆகும்.
(4) மகா சம்பத அரசன், மணிபக்பாலதேவி, வசமர்த்திமாரக ஆகியோராவர்.
(5) ஆண்டிகுரு, சொக்கறியம்மா, பச்சி மீரா ஆகியோராவர். (......)

11. பின்வரும் பாத்திரங்களுள் கந்தசஷ்டி சூரன் போருடன் **தொடர்புபடாத** பாத்திரம்
(1) வீரவாகுத்தேவர் (2) தாரகாசுரன் (3) கஜமுகாசுரன்
(4) நாரதர் (5) பானுகோபன் (......)

12. மலையகப் பிரதேசத்தில் இடம்பெறும் காமன் கூத்தின் பிரதான கதை,
(1) சிவன் தக்கனின் தவத்தை அழித்தமை ஆகும்.
(2) இந்திரன் சிவனின் தவத்தை அழித்தமை ஆகும்.
(3) மன்மதன் சிவனின் தவத்தைக் குழப்பியமை ஆகும்.
(4) அர்ச்சுனன் பாசுபத அஸ்திரம் பெற்றமை ஆகும்.
(5) முருகன் சூரபத்மனைக் கொன்றமை ஆகும். (......)

13. 'குளுத்திச் சடங்கு' பெரும்பாலும் நடைபெறும் மாதம்
(1) தை (2) மாசி (3) பங்குனி (4) சித்திரை (5) வைகாசி (......)

14. பின்வருவனவற்றுள் பாண்டவர்களின் வனவாசத்துடன் **தொடர்பற்ற** கூற்று எது ?
(1) கல்முனை பாண்டிருப்பில் பிரதானமாக நிகழ்வது.
(2) திரௌபதை அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடையது.
(3) அர்ச்சுனன் தவம் செய்து பாசுபத அஸ்திரம் பெற்றதைக் குறிப்பது.
(4) பாண்டவரும் திரௌபதையும் வனவாசம் செல்லும் காட்சி அபிநயித்துக் காட்டப்படுவதைக் குறிப்பது.
(5) பதினெட்டுச் சடங்குகளில் பதினாறாவது சடங்காக இடம்பெறுவது. (......)

15. பின்வருவனவற்றுள் 'பலே' பற்றிய மிகச் சரியான கூற்று எது ?
(1) பாடலே பிரதான இடம்பெறும்.
(2) பதினாறாம் நூற்றாண்டில் இத்தாலியிலும் பிரான்சிலும் தோன்றியது.
(3) மேடை அலங்காரம் பல்வகையில் பயன்படுத்தப்படும்.
(4) பாடல், வாத்திய இசை என்பன பிரதானமானதாக அமையும்.
(5) சீனாவின் பாரம்பரிய நாடக மரபாகும். (......)

16. 'தானயம்பல' எனும் அரங்கவெளியைத் தளமாகக் கொண்டு நிகழ்த்தப்படும் ஆற்றுகை வடிவம்
(1) ரட்டயக்கும (2) சன்னியக்கும (3) கோலம
(4) சொக்கரி (5) நாடகம (......)

17. சொக்கரி நாடகத்தில் பாத்திரங்களை அறிமுகம் செய்பவர்
(1) கட்டியக்காரன் (2) குருநான்சே (3) பொத்தே குரு
(4) விகடகவி (5) காரியகரவன ரால (......)

[பக். 3 ஐப் பார்க்க

**18.** 1933 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில நாடகக் கழகத்தை ஸ்தாபித்தவர்
(1) திஸ்ஸ காரியவசம் (2) எதிரிவீர சரத்சந்திர (3) இ. எவ். சி. லுடோவைக்
(4) ஏர்னஸ்ற் மக்கின்டயர் (5) ரத்னபால த சில்வா (......)

**19.** பின்வருவனவற்றுள் 'நாடகம்' எனும் வடிவத்தின் பண்பாக **அமையாத** கூற்று எது ?
(1) ஆண்கள் மாத்திரம் நடிப்பர்.
(2) நாட்டிய தர்மி பாணியிலான நடிப்பு பயன்படுத்தப்படும்.
(3) பின்னணித் திரை பயன்படுத்தப்படும்.
(4) களத்துமேடு எனும் அரங்கில் இடம்பெறும்.
(5) குறித்த நாடகப் பாடம் ஒன்று இருக்கும். (......)

**20.** பாஸ்கு நாடகத்தில் வரும் பாஸ்கு(Pascoa) என்பது உரித்தாகும் மொழி எது ?
(1) ஒல்லாந்து மொழி (2) போர்த்துக்கேய மொழி (3) ஆங்கில மொழி
(4) பிரெஞ்சு மொழி (5) ஸ்பானிய மொழி (......)

**21.** 'நாடகம' வின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்
(1) டொன் பஸ்ரியன் (2) ஜயவீர பண்டார (3) ஜோன் த சில்வா
(4) பிலிப்பு சிஞ்ஞோ (5) சார்ள்ஸ் டயஸ் (......)

**22.** நூர்த்தி நாடக மரபு இலங்கையில் தோற்றம் பெற்றமைக்கான அடிப்படைக் காரணம்,
(1) இந்தியாவின் ஜனரஞ்சகமான ஹிந்துஸ்தானி சங்கீதம் பிரபல்யம் அடைந்தமை ஆகும்.
(2) கொட்டகை(டீட்டர்) மற்றும் மினர்வா நாடகங்களின் வீழ்ச்சி ஆகும்.
(3) வெவ்வேறு பண்பாடுகளின் கலப்பு அம்சங்கள் காணப்பட்டமை ஆகும்.
(4) போதிய அறிவுடைய நாடக எழுத்துருக்களின் தட்டுப்பாடு ஆகும்.
(5) டவர் ஹோல் அரங்கின் வீழ்ச்சி ஆகும். (......)

**23.** கொட்டகை(டீட்டர்) மற்றும் மினர்வா நாடகங்களில் பங்கேற்றவர்கள் யாவர் ?
(1) பந்துல குணவர்தன, தம்மயாகொட ஆகியோர்.
(2) ரோலண்ட் அபேபொல, விஜேரத்தின பத்திராஜ ஆகியோர்.
(3) சிரிசேன விமலவீர, பி. ஏ. டபிள்யூ. ஜயமன்ன ஆகியோர்.
(4) ரஞ்சனி ஒபேசேகர, ல்க்மி த சில்வா ஆகியோர்.
(5) சாள்ஸ் அபயசேகர, திலகசிறி ஆகியோர். (......)

**24.** இயற்பண்புவாத நாடக மோடியின் முன்னோடி
(1) அலெக்ஸாண்டர் டூமாஸ் (2) எமிலி சோலா (3) ஹென்றிக் இப்சன்
(4) அன்ரன் செக்கோவ் (5) டேவிட் பெலஸ்கோ (......)

**25.** கற்பித நாடகங்களின் பிரதான போக்கு
(1) உள்ளதை உள்ளவாறு காட்டுதல்
(2) வாழ்க்கையைத் தத்ரூபமாக எடுத்துக்காட்டல்
(3) இயற்கையின் அழகு, காதலின் சிறப்பு, மனிதத் தன்மையின் சிறப்பு என்பவற்றை மனிதருள் கிளறச் செய்தல்
(4) பார்ப்போரை நான்காவது சுவராகக் கொண்டிருத்தல்
(5) சிந்திக்கத் தூண்டுவதற்கான போதனைகளை வழங்குதல் (......)

**26.** பின்வருவனவற்றுள் 'சினிமா' பற்றிய **தவறான** கூற்று எது ?
(1) தொழினுட்ப சாதனப் பயன்பாட்டுடன் தொடர்புடையது.
(2) தட்புல-செவிப்புலக் கலை ஊடகமாகும்.
(3) படத்தொகுப்பை முதன்மையாகக் கொண்டது.
(4) களஞ்சியப்படுத்தத்தக்க சித்திரிப்புக் கலையாகும்.
(5) பார்ப்போர்-ஆற்றுவோரின் நேரடித் துலங்களுடன் தொடர்புடையது. (......)

**27.** நாடகம், சிறுகதை இலக்கியம் ஆகிய இரு கலைகளுக்கும் பொதுப்படையான பண்பாகக் **கருதமுடியாதது**
(1) பார்த்து அன்றேல் வாசித்து அறியக்கூடிய தன்மை
(2) நுகர்வோர் கற்பனைக்குக் கட்டுப்பாடு இன்மை
(3) பாத்திரங்கள் காணப்படல்
(4) சுதந்திர கலைப்படைப்பாகக் காணப்படல்
(5) படைப்பாளி இல்லாத நிலையிலும் ரசிக்கக்கூடியதாக இருத்தல் (......)

இங்கே வெட்டி அகற்றவும்

[பக். 4 ஐப் பார்க்க

**28.** 'திரை என்பதற்கு எழினி, வேதிகா, யவனிகா எனப் பல்பெயர் உண்டென்பர்.' எழினி பற்றிக் குறிப்பிடும் இலக்கியம்
(1) பரத நாட்டிய சாஸ்திரம் (2) தொல்காப்பியம் (3) சிலப்பதிகாரம்
(4) சீவகசிந்தாமணி (5) கவிதையியல் (……)

**29.** சைக்குளோராமாவின் (வான் திரை) பயன்பாடு என்ன ?
(1) பின்புறத்தில் இருந்து பின்னணியை அமைக்க உதவும்.
(2) நடிகர் வரவின்போது பயன்படுத்தப்படும்.
(3) காட்சி மாற்றம் செய்ய உதவும்.
(4) பார்ப்போர் பகுதியையும் மேடையையும் பிரிக்கும்.
(5) நாடகம் தொடங்கும்போது மூடித்திறக்க உதவும். (……)

**30.** மலையகத்தில் பொன்னர் சங்கர் கூத்து பெரும்பாலும் நடைபெறும் மாதங்கள் எவை ?
(1) தை, மாசி (2) மாசி, பங்குனி (3) பங்குனி, சித்திரை
(4) சித்திரை, வைகாசி (5) கார்த்திகை, மார்கழி (……)

**31.** நாட்டிய சாஸ்திரத்தில் பரதரால் **குறிப்பிடப்படாத** பாவம்
(1) சோகம் (2) காதல் (3) வாத்சல்யம் (4) பயம் (5) கோபம் (……)

**32.** இந்தியாவில் 'மணிப்புரி' ஆடப்படும் பிரதேசம்
(1) தமிழ்நாடு (2) ஆந்திரா (3) கேரளா
(4) கர்நாடகா (5) மகாராஷ்டிரா (……)

**33.** அரிஸ்டோட்டல் பேசும் மூன்றன் ஒருங்கியல்பு எதனைக் குறிக்கும் ?
(1) காலம், இடம், களம் (2) ஆரம்பம், இடை, முடிவு
(3) கதைப்பின்னல், பாத்திரம், சிந்தனை (4) செயல், இடம், காலம்
(5) நடிகர், மேடை, பார்ப்போர் (……)

**34.** இந்திய சமஸ்கிருத அரங்கில் பயன்படுத்தப்பட்ட அரங்க அலங்கரிப்பு வகைகள் எத்தனை ?
(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து (5) ஆறு (……)

**35.** சோபோகிளிசால் எழுதப்பட்ட 'சற்றயர்' நாடகம்
(1) குளோப்ப்ஸ் (2) றக்கேஸ் (3) அகமெம்னன்
(4) ஈடிப்பஸ் அற்கொலோனஸ் (5) கெலன் (……)

**36.** ரோம அரங்க வரலாற்றில் மகிழ்நெறி நாடகங்களை எழுதிப் புகழ் பெற்றவர்
(1) புளோட்டஸ் (2) செனேக்கா (3) மெனாண்டர்
(4) அரிஸ்ரோ பேன்ஸ் (5) யூரிப்பிடிஸ் (……)

**37.** சேக்ஸ்பியர் தனது நாடகங்களில் **பயன்படுத்தாத** உத்தி
(1) தனிமொழி (2) புறச்சொல் (3) தன்னுரை
(4) உரைஞர் உரை (5) வெற்றுக் கவிதை (……)

**38.** சங்க கால கோடியரின் பிரதான வாத்தியம்
(1) தடாரி (2) முரசு (3) முழவு (4) கிணை (5) யாழ் (……)

**39.** சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய கொடுகொட்டி ஆட்டத்தின் மையக் கதை,
(1) கண்ணன் யானையின் தந்தங்களை உடைத்துக் கொன்ற கதை ஆகும்.
(2) சிவன் முப்புரங்களையும் எரித்த கதை ஆகும்.
(3) கண்ணன் வாணனைக் கொன்ற கதை ஆகும்.
(4) முருகன் சூரபத்மனைக் கொன்ற கதை ஆகும்.
(5) அயிராணி உழத்தி வேடத்தில் ஆடிய கதை ஆகும். (……)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள சிறந்த நாடகவியலாளர்



(1) குறோட்டோவ்ஸ்கி
(2) ஸ்ரனிஸ்லாவ்ஸ்கி
(3) பீற்றர் புறூக்
(4) அயனஸ்கோ
(5) ஆதர் மில்லர் (……)

✻✻

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **II** இல் பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி II

### பிரிவு A

(எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை எழுதுக.)

**1.** நாடக அரங்க வரலாற்றில் நடிப்புக் கோட்பாடுகளும் அரங்கியற் கோட்பாடுகளும் காலத்திற்குக் காலம் தோற்றம் பெற்றுள்ளன.
பின்வருவோர் முன்வைத்த நடிப்புக் கோட்பாடுகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் விளக்குக.
(i) ஸ்ரனிஸ்லாவ்ஸ்கி (05 புள்ளிகள்)
(ii) மேயர் ஹோல்ட் (05 புள்ளிகள்)
(iii) குறட்டொவ்ஸ்கி (05 புள்ளிகள்)

**2.** (i) ஆற்றுகைக் கலைகள் என்றால் என்ன ? (02 புள்ளிகள்)
(ii) நாடகக் கலையின் சிறப்பியல்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)
(iii) நாடகம் எவ்வாறு ஏனைய ஆற்றுகைக் கலைகளிலிருந்து வேறுபடுகிறது என்பதனை விளக்குக. (07 புள்ளிகள்)

**3.** அவல்ச் சுவை நாடக ஆசிரியர்கள் தத்தமது காலப் பின்னணிகளுக்கு ஏற்றவகையில் நாடகங்களை எழுதியுள்ளனர். பின்வருவோர் அவலச் சுவை நாடக மரபிற்கு ஆற்றிய பங்களிப்புகளை விளக்குக.
(i) ஈஸ்கலஸ் (03 புள்ளிகள்)
(ii) சோபோகிளிஸ் (03 புள்ளிகள்)
(iii) யூறிப்பிடிஸ் (03 புள்ளிகள்)
(iv) வில்லியம் சேக்ஸ்பியர் (06 புள்ளிகள்)

### பிரிவு B

(எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை எழுதுக:)

**4.** நடிகர் நின்று நடிக்கும் அரங்கவெளியை ஓர் அழகியல் வெளி என்பர். பின்வரும் அரங்கவெளிகளின் இயல்புகளை விளக்குக.
(i) சிலப்பதிகாரத்தில் கூறப்படும் ஆய்ச்சியர் குரவை அரங்கவெளி (05 புள்ளிகள்)
(ii) மகிடிக் கூத்து அரங்கவெளி (05 புள்ளிகள்)
(iii) யப்பானிய 'நோ' அரங்கவெளி (05 புள்ளிகள்)

**5.** (i) இந்திய அரங்கில் பேசப்படும் மார்க்க, தேசி பற்றிச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)
(ii) மார்க்க அரங்கின் **பத்து** வகை நாடக மரபுகளையும் விளக்குக. (10 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.
(i) அர்ச்சுனன் தபசு
(ii) பலே
(iii) பீஜிங் ஒபேரா
(iv) சொக்கரி
(v) கொமடியா டெல் ஆர்த்தே
(03 × 05 = 15 புள்ளிகள்)

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண் : ................................

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** 'அன்ரிகனி' நாடகத்தில் வரும் குற்றம் புரியாது உயிரை மாய்த்துக்கொள்ளும் பெண் பாத்திரம்
(1) அன்ரிகனி (2) இசுமெனி (3) ஜொகஸ்ரா
(4) இயூரிடிசி (5) எமிலியா (......)

**2.** 'ஒத்தெல்லோ' நாடகக் கதையின்படி நாடகத்தின் இறுதியில் டெஸ்ரிமோனா கொலை செய்யப்படும் இடம்
(1) வெனிஸ் நகரம் (2) சைப்பிரஸ் நகரம் (3) துருக்கி நகரம்
(4) தீபஸ் நகரம் (5) பொசிபஸ் நகரம் (......)

**3.** 'யூலியசீசர்' நாடகக் கதையின்படி சீசரின் மறைவிற்குப் பின் ஆட்சியதிகாரத்தில் இருந்தவர்கள் யாவர் ?
(1) புறூட்டஸ், லெப்பிடஸ், கயஸ்கா
(2) கயஸ்கா, சீனா, காசியஸ்
(3) ஒக்ரேவிய சீசர், லெப்பிடஸ், மார்க் அன்ரனி
(4) மார்க் அன்ரனி, புறூட்டஸ், பகார்னியா
(5) ஒக்ரேவிய சீசர், கயஸ்கா, புறூட்டஸ் (......)

**4.** பின்வருவனவற்றுள் நா. சுந்தரலிங்கத்தால் எழுதப்பட்டவை,
(1) விடிவை நோக்கி, காலம் சிவக்கிறது, செவ்விளக்கு என்பனவாகும்.
(2) விழிப்பு, அபசுரம், பம்மாத்து என்பனவாகும்.
(3) அபசுரம், விழிப்பு, கடூழியம் என்பனவாகும்.
(4) கடூழியம், இரு துயரங்கள், வெறியாட்டு என்பனவாகும்.
(5) சங்காரம், சக்தி பிறக்குது, அபசுரம் என்பனவாகும். (......)

**5.** பொறுத்தது போதும், புதியதொரு வீடு போன்ற நாடகங்களை முதலில் நெறியாள்கை செய்தவர்
(1) இ. சிவானந்தன் (2) அ. தாசீசியஸ் (3) சி. மௌனகுரு
(4) சுஹைர் ஹமீத் (5) பௌசுல் அமீர் (......)

**6.** இலங்கைத் தமிழ் அரங்க வரலாற்றில் பாநாடகங்களை எழுதியோர் யாவர் ?
(1) மகாகவி உருத்திரமூர்த்தி, இ. முருகையன், அம்பி
(2) சி. ஜெயசங்கர், கலைச்செல்வன், அன்ரனி ஜீவா
(3) அராலியூர் சுந்தரம்பிள்ளை, புதுவை அன்பன், பாலசிங்கம்
(4) பாலசுகுமார், நா. சுந்தரலிங்கம், கதிரேசபிள்ளை
(5) மெற்றாஸ் மெயில், முருகையன், கலைச்செல்வன் (......)

**7.** இவர்களுக்கு வேடிக்கை, அரசனின் புத்தாடை, தூரத்து இடிமுழக்கம் போன்ற நாடகங்களை நெறியாள்கை செய்தவர்
(1) இளைய பத்மநாதன் (2) க. பாலேந்திரா (3) லடீஸ் வீரமணி
(4) வீ. எம். குகராஜா (5) ஏ. ஜே. கனகரட்னா (......)

**8.** 'சமூக மாற்றத்திற்கான அரங்கு' எனும் நூலின் ஆசிரியர்
(1) கா. சிவத்தம்பி (2) காரை சுந்தரம்பிள்ளை (3) க. சிதம்பரநாதன்
(4) ம. சண்முகலிங்கம் (5) அருணா செல்லத்துரை (......)

[பக். 2 ஐப் பார்க்க

**9.** பல நடிகர் மன்றங்கள், குழுக்கள் இணைந்தே நடிகர் ஒன்றியம் தோன்றியதென்பர். அவற்றுள் இரண்டு நிறுவனங்கள்
(1) அவைக்காற்று கலைக்கழகம், நெல்லியடி அம்பலத்தாடிகள் குழு
(2) திருமறைக் கலாமன்றம், மட்டக்களப்பு நாடக சபா
(3) எங்கள் குழு, கூத்தாடிகள் குழு
(4) நாடக அரங்கக் கல்லூரி, எங்கள் குழு
(5) அரங்கச் செயற்பாட்டுக் குழு, செயற்றிறன் அரங்க இயக்கம் (……)

**10.** பின்வருவனவற்றுள் கூத்து முறையில் அமைந்த நாடகம்
(1) கோடை (2) உறவுகள் (3) சங்காரம்
(4) விளக்கும் விரல்களும் (5) கண்டனன் சீதையை (……)

**11.** பின்வரும் கூற்றுகளுள் தெருவெளி அரங்கு பற்றிய சரியான கூற்று **அல்லாதது**
(1) தெருவை ஆற்றுகை வெளியாகக் கொண்டு ஆற்றப்படுவது.
(2) சிறுவர் முதல் பெரியோர் வரையான பார்ப்போரைக் கொண்டது.
(3) தெருவிற்கே உரிய வேகமும் நேரச் சுருக்கமும் கொண்டது.
(4) மெல்லிய நரம்பு வாத்தியங்கள் பயன்படுத்தப்படுவது.
(5) பார்ப்போரை ஆற்றுகையில் பங்கேற்க வைப்பது. (……)

**12.** நாடக வழக்கு, உலகியல் வழக்கு என்பன பற்றி எடுத்துரைக்கும் நூல்
(1) சிலப்பதிகாரம் (2) கலித்தொகை (3) பரிபாடல்
(4) தொல்காப்பியம் (5) புறநானூறு (……)

**13.** 'மத்த விலாச பிரகசனம்' எனும் நாடகத்தை எழுதிய மன்னன்
(1) முதலாம் நந்திவர்மன் (2) அருள்மொழிவர்மன் (3) மகேந்திர பல்லவன்
(4) இராஜேந்திரன் (5) இராஜ ராஜசோழன் (……)

**14.** பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் என்பன,
(1) சடங்கரங்குகளாக உள்ளன. (2) செவ்வியல் அரங்குகளாக உள்ளன.
(3) கதை கூறும் அரங்குகளாக உள்ளன. (4) சொல்லாடல் அரங்குகளாக உள்ளன.
(5) இசைப்பாடல் அரங்குகளாக உள்ளன. (……)

**15.** சம்பந்த முதலியாரால் உருவாக்கப்பட்ட நாடகக் கம்பனி
(1) போய்ஸ் நாடகக் கம்பனி (2) சுகுணவிலாச சபை (3) சுகிர்தவிலாச சபை
(4) சரஸ்வதி விலாச சபை (5) சுபோத விலாச சபை (……)

**16.** 'கதா காலேட் சேபம்' எனும் வடிவத்தினூடாக அறிமுகமான கீர்த்தனை நாடகங்கள் தோன்றியது,
(1) குஜராத்தில் ஆகும். (2) தெலுங்கு தேசத்தில் ஆகும்.
(3) ஆந்திராவில் ஆகும். (4) மகாராஷ்டிராவில் ஆகும்.
(5) உத்தரப் பிரதேசத்தில் ஆகும். (……)

**17.** தமிழில் இராம நாடகக் கீர்த்தனையை எழுதியவர்
(1) கோபாலகிருஸ்ண பாரதியார் (2) அருணாசலக் கவிராயர்
(3) தியாகராஜ பாகவதர் (4) முத்துசுவாமி தீட்சதர்
(5) பாபநாசம்சிவன் (……)

**18.** இரத்தக் கண்ணீர், உதயசூரியன், ஓரிரவு போன்ற நாடகங்களை எழுதியோர் முறையே,
(1) திருவாரூர் தங்கராசு, அண்ணாத்துரை, கருணாநிதி ஆவர்.
(2) அண்ணாத்துரை, கருணாநிதி, திருவாரூர் தங்கராசு ஆவர்.
(3) கருணாநிதி, திருவாரூர் தங்கராசு, அண்ணாத்துரை ஆவர்.
(4) திருவாரூர் தங்கராசு, கருணாநிதி, அண்ணாத்துரை ஆவர்.
(5) அண்ணாத்துரை, திருவாரூர் தங்கராசு, கருணாநிதி ஆவர். (……)

**19.** தமிழ்நாட்டில் 'தன்னானே' கலைக்குழுவைத் தொடக்கியவர் யார் ?
(1) வேலு சரவணன் (2) அ. மங்கை (3) கே. ஏ. குணசேகரன்
(4) சே. இராமானுஜம் (5) மு. இராமசாமி (……)

**20.** பேட்டோல்ட் பிறெ.்டின் 'வெண்கட்டி வட்டம்' என்ற நாடகத்தின் பிரதான கரு,
(1) அரச பீடத்தில் இருந்தாலும் மனசாட்சிக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதாகும்.
(2) எந்தப் பொருளும் உரியவருக்கே உரித்தாக வேண்டும் என்பதாகும்.
(3) ஆயுதம் எடுத்தவன் ஆயுதத்தாலேயே மடிவான் என்பதாகும்.
(4) சந்தேக புத்தி தன்னைத்தானே அழித்துவிடும் என்பதாகும்.
(5) பெண் விடுதலை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதாகும். (……)

[பக். 3 ஐப் பார்க்க

21. 'ஈடிப்பஸ் மன்னன்' என்ற நாடகத்தின் இறுதியில் ஜொகஸ்டா,
(1) கண்களைக் குத்திக் குருடாக்கிக் கொள்கிறாள்.
(2) சித்தறொன் மலையில் அடிபட்டுச் சாகிறாள்.
(3) கொரிந் வாசியால் கொலை செய்யப்படுகிறாள்.
(4) கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொள்கிறாள்.
(5) தன்னைத்தானே குத்திக்கொண்டு சாகிறாள். (……)

22. பின்வரும் கூற்றுகளுள் கிரேக்க அரங்கப் பண்பாட்டுக்குப் **பொருந்தாத** கூற்று
(1) நாடகக் காட்சிகள் பகலில் காட்டப்பட்டன.
(2) எல்லா நடிகர்களும் வேடமுகம் அணிந்தனர்.
(3) ஆண்கள் மாத்திரம் நடித்தனர்.
(4) கோரஸ் நாடகத்தின் நடிப்புப் பாணியுடன் தொடர்புபட்டிருந்தது.
(5) இரத்தம் சிந்துதல், முத்தமிடுதல் போன்ற காட்சிகள் மேடையில் காட்டப்பட்டன. (……)

23. சமஸ்கிருத நாடக மரபில் 'நாடிகா' என்ற ஒரு நாடக வகையை நிலைப்படுத்தியவர் யார் ?
(1) பாசர் (2) ஸ்ரீ ஹர்சர் (3) காளிதாசர்
(4) சூத்திரகர் (5) ஸ்ரீ நாம தேசிகர் (……)

24. சமஸ்கிருத அரங்கப் பகுதிகளில் ஒன்றான 'ரங்கபிதா' குறிப்பது,
(1) ஒப்பனை அறையை ஆகும். (2) பார்ப்போர் கூடத்தை ஆகும்.
(3) அரங்கப் பொருள்களை ஆகும். (4) பிரதான மேடையை ஆகும்.
(5) பிரதான வாயில்களை ஆகும். (……)

25. மத்திய கால திருமறை நாடகங்களின் கதைகள் பெரும்பாலும்,
(1) புனிதர்களின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டவை.
(2) மனிதர்களின் துர்க்குணத்தையும் பலவீனத்தையும் எடுத்துக்காட்டுபவை.
(3) திருவிவிலியக் கதைகளைப் பின்புலமாகக் கொண்டவை.
(4) மனிதர்களின் வீரதீரச் செயல்களுடன் தொடர்புபட்டிருக்கும்.
(5) புனிதர்களின் அற்புதங்களை உள்ளடக்கியதாக இருக்கும். (……)

26. இங்கிலாந்தின் அரங்க வரலாற்றில் நடிகர்களின் தொழில் சட்டரீதியாக அரசாங்கத்தால் உள்வாங்கப்பட்ட ஆண்டு
(1) 1558 (2) 1568 (3) 1572
(4) 1582 (5) 1603 (……)

27. எலிசபெத் யுகத்தில் சேக்ஸ்பியருக்குச் சமகாலத்தவர்களான நாடகக் கலைஞர்களுள் சேக்ஸ்பியர் பிறந்த 1564ஆம் ஆண்டிலேயே பிறந்த நாடகாசிரியர்
(1) ஜோன் லிலி (2) பென் ஜோன்சன் (3) தோமஸ் கிட்
(4) கிறிஸ்தோபர் மாலோ (5) எட்மன் ஸ்பென்சன் (……)

28. யப்பானிய நாடக மரபில் விகட நிகழ்வாக நடிகர் - பார்ப்போரிடையே தளர்நிலையை ஏற்படுத்தும் நாடக வடிவம் எது ?
(1) நோ (2) கபுக்கி (3) கிஜோயென்
(4) கோவாகா (5) புன்ரகு (……)

29. யப்பானிய நோ நாடகங்களை சின் (SHIN), நான் (NAN), நியோ (NYO), கியோ (KYO), கி (KI) எனும் பாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு ஐந்து வகையாகப் பிரிப்பர். அவற்றுள் நியோ குறிக்கும் பாத்திரம்
(1) தெய்வம் (2) மனிதன் (3) பெண்
(4) பைத்தியம் (5) பேய் (……)

30. பின்வருவனவற்றுள் அன்ரன் செக்கோவ் அவர்களால் எழுதப்பட்ட நாடகம்
(1) முப்பது செக்கனில் மூச்சு (2) மூன்று பென்னி காசுகள் (3) சமூகத்தின் தூண்கள்
(4) காட்டு வாத்து (5) கடல் வாத்து (……)

31. அபத்த அரங்கின் முன்னோடியான 'சாமுவல் பெக்கற்' இன் தாய்நாடு எது ?
(1) பிரான்ஸ் (2) தென் அமெரிக்கா (3) இத்தாலி
(4) போலந்து (5) ஐரிஸ் தேசம் (……)

32. நடிகரைத் தயார்படுத்துவதற்காக உடற்பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும் அரங்க விளையாட்டு
(1) கரடியும் கிராம மக்களும் (2) பொன் முட்டை (3) ஆடும் வீடும்
(4) கோழி கோட்டான் (5) நாரை நாராய் (……)

[பக். 4 ஐப் பார்க்க

**33.** நாடகம் ஒன்றில் பயன்படும் ஆடை அணிகள் எவ்வாறு இருத்தல் வேண்டும் ?
(1) அலங்காரத்திற்கு ஏற்றதாக அமைதல் வேண்டும்.
(2) நாடகம் மேடை ஏறும் காலத்திற்கு ஏற்றதாக அமைதல் வேண்டும்.
(3) நாடக மோடிக்கு ஏற்றதாக அமைதல் வேண்டும்
(4) பாத்திரத்தின். கவர்ச்சியை அதிகரிக்க வேண்டும்.
(5) பகட்டானதாகவும் ஆடம்பரமானதாகவும் அமைதல் வேண்டும். (……)

**34.** நாடகத் தயாரிப்பாளரின் மிகப் பிரதான பணி,
(1) ஒத்திகைகளை மேற்கொள்ளுதல் ஆகும்.
(2) நடிகருக்குப் பயிற்சிகளை வழங்குதல் ஆகும்.
(3) நடிகருக்குரிய பாத்திரங்களை வழங்குதல் ஆகும்.
(4) நாடகத்திற்கு வேண்டிய நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகும்.
(5) மேடை முகாமைத்துவத்தினை மேற்கொள்ளல் ஆகும். (……)

**35.** நாடகத்திற்கான இசையின் இயல்புகளில் ஒன்று
(1) பொருத்தமான இடங்களில் பாடல்களை வழங்குதல்
(2) நாடகத்தினூடே மேலோங்கும் உணர்ச்சிக்கு அழுத்தம் கொடுத்தல்
(3) பாடல்கள் இல்லாது வாத்தியங்களின் ஊடாக மட்டும் வழங்கப்படுதல்
(4) பார்ப்போருக்குப் பழக்கமானதாக அமைந்திருத்தல்
(5) கதையோட்டத்திற்குப் பின்னணியாக மட்டும் அமைந்திருத்தல் (……)

**36.** கட்டையான ஒருவர் உயரமான நடிகர் பாத்திரம் ஏற்க வேண்டுமாயின் அவர் அணிய வேண்டியது,
(1) சதுரப் பெட்டிகள் கொண்ட ஆடை ஆகும்.
(2) நேர் கோடுகள் கொண்ட ஆடை ஆகும்.
(3) குறுக்குக் கோடுகள் கொண்ட ஆடை ஆகும்.
(4) தனி நிறம் கொண்ட ஆடை ஆகும்.
(5) குறுக்குக் கோடுகளையும் நேர் கோடுகளையும் கொண்ட ஆடை ஆகும். (……)

**37.** அரங்கில் ஒளி விதானிப்புச் செய்யும்போது நடிகர் அன்றேல் பொருள் ஒன்றைக் குறிப்பாகக் காட்ட உதவுவது,
(1) கீற்றொளி ஆகும். (2) வர்ணச் சக்கரம் ஆகும். (3) விரிகைச் சக்கரம் ஆகும்.
(4) பொட்டொளி ஆகும். (5) பெருக்கொளி ஆகும். (……)

**38.** அருகில் படத்தில் காட்டப்பட்டுள்ள வேடஉடை ஒப்பனைக்குரிய பாத்திரம்,
(1) கதக்களிக்குரியது.
(2) கதக்குக்குரியது.
(3) ஒடிசிக்குரியது.
(4) தெருக்கூத்துக்குரியது.
(5) மோகினி ஆட்டத்திற்குரியது.



(……)

**39.** அருகிலுள்ள படம் குறிக்கும் பாத்திரத்தை இலங்கையில் நடித்துப் புகழ்பெற்றவர்,
(1) வீ. வீ. வைரமுத்து ஆவார்.
(2) கலையரசு சொர்ணலிங்கம் ஆவார்.
(3) ஏ. ரி. பொன்னுத்துரை ஆவார்.
(4) பிரான்சிஸ் ஜெனம் ஆவார்.
(5) எஸ். ரி. அரசு ஆவார்.



(……)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள வேட முகங்கள்,
(1) கிரேக்க திறஜெடி நாடகங்களுக்குரியன.
(2) சீன ஒப்பேறாவுக்குரியன.
(3) யப்பானிய நோ நாடகங்களுக்குரியன.
(4) இந்தோனேசிய வயாங்குலிற்றுக்குரியன.
(5) சிங்கள நாடகமவுக்குரியன.



(……)

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

**அறிவுறுத்தல்கள் :**

* பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி II

### பிரிவு A

(எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை எழுதுக.)

1. காளிதாசரின் அபிக்ஞான சாகுந்தலம் இலக்கிய நயம் பொருந்திய நாடகமாகும்.
   (i) காளிதாசரின் நாடகப் பாணியினை விளக்குக. (06 புள்ளிகள்)
   (ii) இந்நாடகத்தில் வரும் பின்வரும் பாத்திரங்களின் இயல்புகளைச் சுருக்கமாக விளக்குக.
   (அ) சகுந்தலை (03 புள்ளிகள்)
   (ஆ) துஷ்யந்தன் (03 புள்ளிகள்)
   (இ) பிரியம்வதை (03 புள்ளிகள்)

2. (i) சேக்ஸ்பியரின் அவல நாடகங்கள் கிரேக்க அவல நாடகங்களிலிருந்து எவ்வகையில் வேறுபடுகின்றனவெனச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)
   (ii) சேக்ஸ்பியரின் அவல நாடகம் ஒன்றினைக் குறிப்பிட்டு, அதில் வரும் பாத்திரங்களினூடாக மோதுகை எவ்வாறு முன்னெடுக்கப்படுகிறது என்பதனை விளக்குக. (09 புள்ளிகள்)

3. (i) யதார்த்த வாதம் என்றால் என்ன என்பதனை விளக்குக. (05 புள்ளிகள்)
   (ii) இப்சனின் பொம்மை வீடு நாடகத்தை யதார்த்த நாடகமாகக் கொள்ளலாமா ? காரணங்களை முன்வைத்து விடையை விளக்குக. (10 புள்ளிகள்)

### பிரிவு B

(எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை எழுதுக.)

4. (i) மலையகத்தில் நிகழ்த்தப்படும் கூத்து வகைகள் **ஐந்து** தருக. (05 புள்ளிகள்)
   (ii) மலையகக் கூத்துகளுக்கும் இலங்கையின் கிழக்குப் பகுதிகளில் இடம்பெறும் கூத்துகளுக்குமிடையே ஆற்றுகை முறையில் காணப்படும் பிரதான வேறுபாடுகள் யாவை ? விளக்குக. (10 புள்ளிகள்)

5. இலங்கைத் தமிழ் அரங்க வளர்ச்சியில் பின்வருவோரின் பங்களிப்புகளை விளக்குக.
   (i) கலையரசு சொர்ணலிங்கம் (05 புள்ளிகள்)
   (ii) பேராசிரியர் கணபதிப்பிள்ளை (05 புள்ளிகள்)
   (iii) அருட்திரு மரியசேவியர் அடிகளார் (05 புள்ளிகள்)

6. இலங்கையின் நவீன சிங்கள அரங்கு வரலாற்றில் பின்வருவோரின் பணிகளை விளக்குக.
   (i) எதிரிவீர சரத்சந்திர (05 புள்ளிகள்)
   (ii) பராக்கிரம நிரியல்ல (05 புள்ளிகள்)
   (iii) தர்மஸ்ரீ பண்டாரநாயக்க (05 புள்ளிகள்)

* * *

இங்கே வெட்டி அகற்றவும்

4302